# 3.3 தூய ஆவியாரின் கொடைகள்



வாசிக்கவும்
1 கொரிந்தியர் 13-14ம் அதிகாரங்கள்




**எருசலேமிலிருந்து ----------, பூமியின் எல்லைவரை**

திருத்தூதர் பணியை சிறப்புற நிறைவேற்றுவதற்கு மேற்கூறப்பட்ட பண்புகள் தேவையாக இருந்தன. இந்த நிறைவான பண்புகள் மூலம் ஏனையோரும் இறையாட்சியில் பங்கு கொள்ள நாம் வழிகாட்டுவோம்.



இலவச விநியோகத்திற்காக

பழைய ஏற்பாடு முழுவதும் இறைவனின் ஆட்சியைப்பற்றி கூறப்பட்டுள்ளது. அவருடைய ஆளுகைக்கு முழுவதுமாய் அடிபணிய வேண்டும் என்பது கடவுளின் எதிர்பார்ப்பு எனத் திருமறையில் காணக்கூடியதாக உள்ளது. இறைவன் ஆதிப்பிதாக்கள், இறைவாக்கினர், அரசர் ஆகியோரின் வாழ்வை தமது ஆவியின் மூலமாக வழிநடத்தினார்.

இறைவன் உலகைப் படைத்து அனைத்தையும் ஆட்சி செய்யவும், பாதுகாக்கவும் விரும்பி அப்பொறுப்பை மனிதரிடம் கொடுத்தார். மனிதர் ஆட்சியில் நீதி, நேர்மை, சமத்துவம் ஆகியவற்றை கடவுள் எதிர்ப்பார்த்தார். ஆனால் ஆதாம், ஏவாள் இவைகளைச் சீரழித்து விட்டனர். இறைவனின் ஆட்சிக்குட்பட்ட முக்கிய நிகழ்வாக ஆண்டவர் இயேசு கிறிஸ்து உலகிற்கு வந்தார். அது முதல் இறைவனின் ஆளுகை அவர் பொறுப்பில் இருந்தது. அவரை மக்கள் புரிந்து கொள்ளவில்லை. மக்களை நல்வழிப்படுத்தி அவர்களை இறையாளுகைக்கு உட்படுத்தும் பணியில் தம்மையே தத்தம் செய்தார்.

**இறையரசுக்கு உரியவர்களிடம் காணப்பட வேண்டிய தன்மைகள்**

- அன்பு
- உண்மை
- நீதி
- சமத்துவம்
- கீழ்ப்படிவு
- மனித மாண்பு
- தூய்மை

| இறையரசு ஆளுகையின் காலம் | இறையரசை நிறுவுவதற்கு செயற்பட்டவர்கள் | நடந்த நிகழ்வு |
|---|---|---|
| பழைய ஏற்பாடு | இறைவாக்கினர்கள்<br>தலைவர்கள்<br>அரசர்கள் | இறைவாக்கு வெளிப்படுத்தப்பட்டது.<br>நீதிச் சட்டங்கள் கொடுக்கப்பட்டன. |
| புதிய ஏற்பாடு | இயேசுகிறிஸ்து | மனந்திரும்பல் மூலம் மீட்பு, விடுதலை வாழ்வு, சமுதாய ஏற்றத்தாழ்வு நீக்கல், இணைந்து வாழ முன்வருதல் |
| அண்மைக்கால கிறிஸ்தவ தலைவர்கள் | அருள்திரு. மைக்கல் ரொட்ரிகோ<br>பேராயர் லக்ஷ்மன் விக்ரமசிங்க<br>அருள்திரு. மார்சலின் ஜெயக்கொடி<br>அருள்திரு. சோமா பெரேரா<br>அருள்திரு. டீ.டி. நயில்ஸ் | மக்கள் இறையரசின் வழி நடக்க உதவுதல் |

இயேசுகிறிஸ்துவின் போதனை மற்றும் அவரின் முன்மாதிரியே நாம் பெற்றிருக்கும் மிகப் பெரும் கொடையாகும். அவரைப் பின்பற்றி வாழ்வதே மிகச் சிறந்த வழியாகும். நேர்மையற்ற சமத்துவமற்ற அமைப்புகளுக்கு எதிராக நாம் செயல்பட வேண்டியுள்ளது. அதற்காகவே தூயஆவியானரைப் பெற்றுக் கொண்டிருக்கின்றோம்.

## நாம் கைக்கொள்ள வேண்டிய வாழ்வு முறை

நாம் போட்டி மிகுந்ததோர் உலகில் சிக்கியுள்ளோம். மனிதநேயம் குறைந்து கொண்டு வருகிறது. எனவே உலகின் அமைப்புகளான சமூகம், திருச்சபைகள், பாடசாலைகள், வகுப்புகள், வீடுகள் ஆகியவற்றில் மனிதநேயப் பண்புகளை வளர்க்க வேண்டிய தேவை உள்ளது. பணம், பொருள், ஆடம்பரம் ஆகியன இறையரசிலிருந்து நம்மை விலக்கி வைத்துள்ளன. அவரின் பாடுகள் மற்றும் அவரது சிலுவை மரணம் அவரது மாசற்ற வாழ்வையும் மிகவுயர்ந்த ஒப்படைப்பையும், இறை உணர்வையும் நமக்கு தெளிவாய் எடுத்தியம்புகிறது.

### இறையரசிற்கு எதிரானவை

கடவுளின் விருப்பம் மற்றும் இறையரசின் வளர்ச்சிக்குப் பாதகமாகவும் எதிராகவும் உள்ள செயல்கள்.

- சமூக ஊழல்களில் ஈடுபடுதல்
- மனித நேயம் இல்லாமை
- இருளை விரும்பும் சமூக வாழ்வு
- சமூக வன்முறைகள்
- தவறான பயன்பாடு (துஷ்பிரயோகம்)
- சாதி, சமய வேறுபாடுகள்
- போதைப் பொருள் பாவனை
- ஆள் கடத்தல்
- கப்பம் கோருதல்

இறையரசின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள பொருள் மற்றும் பிற இச்சைகள் அவரது விருப்பத்திற்கு எதிரானவையாகும். தூய ஆவியார் நம்மில் இருந்தால் உலக ஆசை, ஆடம்பரங்களில் ஈடுபடமாட்டோம். முதன்முதலாக சீடர்கள் இவைகளை வெறுத்து ஒதுக்க வழிடத்தியவர் தூய ஆவியாராவார்.

திருச்சபைகளில் ஒவ்வொரு கால இடைவெளிகளிலும் சில மாற்றங்கள் நடைபெற்றன. தூய ஆவியாரால் வழிநடத்தப்பட்ட திருச்சபையில் காலத்துக் காலம் நல்ல தலைவர்கள் தோன்றி திருச்சபையை வழிநடத்தினர்.

உலகத் திருச்சபைகளிலிருந்து பின்வருவோரை உதாரணமாக குறிப்பிடலாம்.

- புனித அசீசியின் பிரான்சிஸ்
- பேராயர் டெஸ்மன் டுட்டு
- அருள்திரு மார்ட்டின் லூதர் கிங்

பாடசாலை மாணவர்களாகிய உங்களுக்கும் இவ்வாறான வாழ்வு வாழும் வாய்ப்புக் கிட்டலாம்.

உங்கள் திருச்சபை வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுத்த முன்வாருங்கள்.

**செயல்பாடு**

உங்களின் புத்தகத்தில் இவ்வட்டவணையைப் பிரதி செய்து நிறைவு செய்யுங்கள்

உங்களிடையே தூய ஆவியாரின் கொடைகளை அறிந்து அவற்றை உபயோகிக்கும் வழிமுறைகளை அட்டவணைப்படுத்துங்கள்.

| தூயாவியின் கொடைகள் | வீட்டில் | வகுப்பில் | திருச்சபையில் | சமுதாயத்தில் |
|---|---|---|---|---|
| | | | | |



மனனம் செய்யவும்

1 கொரிந்தியர் 13:13

1 கொரி 14 அதிகாரத்தை வாசித்து தூய ஆவியாரின் கொடைகளை எவ்விதம் ஒழுங்குபடுத்துவது என விளக்கவும்.

எழைகளுக்கு நற்செய்தி
சிறைப்பட்டோருக்கு விடுதலை
பார்வையற்றோருக்குப் பார்வை
ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை

இவற்றுக்காக கடவுள் என்னை (இயேசுவை) அனுப்பினார்
லூக்கா 4 : 18

**ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை அறிவித்தல்**



இலவச விநியோகத்திற்காக

## செயல்பாடு

1. *1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தை வாசித்து பவுலடியார் கிறிஸ்தவ வாழ்வின் முழுமை குறித்து கூறும் கருத்தை விளக்கவும்.*
2. *நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவியாரின் கொடைகளை உங்களுடைய வகுப்பறையில் பயன்படுத்துவது எப்படி என எழுதுக.*



இலவச விநியோகத்திற்காக